12.03.2025

OS. 170/2013

**வா.சா. 8 – வேல்முருகன்**

__4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை__ :- இல்லை.

__1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-__

4 ம் பிரதிவாதி பிரபுசார்பில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் எதுவும் கேட்டாரா என்றால் அவர் கேட்கவில்லை 1 ம் வாதிதான் கேட்டுள்ளார். நீதிமன்றத்தில் பிரபு வந்துள்ளார். இமயம் அறக்கட்டளைக்கு எத்தனை கட்டிடங்கள் உள்ளது என்றால் 7 கட்டிடங்கள் கட்டிள்ளார்கள். 2013 ம் ஆண்டிற்கு முன்பு 3 கட்டிடத்திற்கு நாங்கள் அனுமதி வழங்கியுள்ளோம் அதற்கு பின்னர் நகர ஊரமைப்பு துறையின் கீழ் அனுமதி பெற்று 4 கட்டிடம் கட்டியுள்ளார்கள். அந்த கட்டிடத்திற்கு பஞ்சாயத்தில் வரி வசூல் செய்கிறோம். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் வரி விதிப்பு சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் இல்லை. வரன்முறைப்படுத்துவதற்காக ஏதாவது மனு நகர ஊரமைப்பு துறையினரிடம் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நகர ஊரமைப்புத்துறை கட்டிட அனுமதி கொடுத்தால் அதன் நகலை எங்களுக்கு அனுப்புவார்கள். கட்டிட வரன்முறை செய்வதற்கான மனுவை பரிசீலனை செய்ய கட்டிடத்தை ஆய்வு செய்வோமா என்றால் ஆய்வு செய்வோம். நகர ஊரமைப்பு துறையினர் கட்டிட ஆய்வு செய்தார்களா என்றால் அதுபற்றி தெரியாது.

**(மற்ற பிரதிவாதிகள் மேற்படி குறுக்கு விசாரணையை தங்களது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது )**

**மறு விசாரணை** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/-M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.